மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு வாருங்கள். மரபை எல்லாம் மீறக் கூடாது. நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள். நான் கேள்வியை முடிக்கப் போகிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஆகவே இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிவடைவதற்குள்ளாக அமைக்கப்படுமா என்பதையும், அவ்வாறு அமைத்து அது அறிவிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமி டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலான ஆதி திராவிடர் நலக் குழுவைத் திருத்தி அமைக்கும் செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 206, 207 மற்றும் 208 ஆகியவை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தின் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல்கோரல்

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் பயனீட்டாளர்களைத் தேர்ந்தெடுக்க அமைக்கப்படும் பணிக்குழுக்களில் இடம் பெறுவோர் குறித்து.

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மேலான அனுமதியுடன் ஒரு முக்கியமான பிரச்சினையை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திதிற்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறைத் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வருகிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர ஊரக வளர்ச்சித் திட்டங்களின்கீழ், பயன்பெறும் பயனீட்டாளர்களின் — அதாவது பெனிபீஷியரீஸ் — பெயர்ப் பட்டியலைத்

தயாரிக்க ஒரு டாஸ்க் ஃபோர்ஸ்—பணிக்குழு ஒன்று நியமனம் செய்ய அரசு உத்தரவிட்டதையும் அந்தப் பணிக் குழுவின் அந்தப் பகுதி சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களையும், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற என் கோரிக்கையை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி நல்ல முடிவெடுப்பதாகவும், இந்த அவையிலே அறிவித்தார்கள்.

ஆனால் அதற்கிடையில் இந்தக் குழு — பணிக் குழு— அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, பய னீட்டாளர்களையும் தேர்ந்தெடுக்கும் பணி முடிவடைகிற நிலையில் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் உள்ள ஒரு முக்கியமான அம்சம் என்னவென்றால் அந்தப் பகுதிகளில் இருக்கிற தி.மு.க. நண்பர்கள் அந்தப் பணிக் குழுவில் தங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்களை மட்டும்தான் போட வேண்டும் என்றும், அதிகாரிகளைப் பயமுறுத்தியும், நிர்ப் பந்தித்தும் வருகிறார்கள். குறிப்பாக, எனது சட்டமன்றத் தொகுதியில் அங்குள்ள நகராட்சித் தலைவர் ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளையும் வட்ட ஆட்சியரையும் **
தி. மு. க. தலைவர்களையே டாஸ்க் ஃபோர்சில் முழுமையாகச் சேர்க்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்து வருகிறார் என்பதை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல் போன்ஸ் சட்டம் பயின்றவர்......

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்குச் சம்பந்தப் படாத ஒருவரைப்பற்றி பேசுவது முறையல்ல. அதுவும் பெய ரைக் குறிப்பிட்டுச் சொல்வது முறையல்ல. பொதுவாகச் சொன்னாலே அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு விளக்கம் தருவார். தலைவர் அவர்களே, அது சம்பந்தமாகச் சொல்லப் பட்ட பெயரை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த ஒரு வரி மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : அதற்கான டாக்குமென்டரி எவிடென்ஸ்களை நான் நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்திருக்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை—சட்டமன்ற உறுப்பினர்களை—ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை ஒதுக்கிவிட்டு — பணிக்குழு என்கிற பெயரில்—பின்வாசல் வழியாக கட்சி அரசியலை—தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்புக்களின்மீது திணிப்பது எந்த வகையிலே நியாயம் என்பதை இந்த அரசு யோசிக்க வேண்டும். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில்கூட எல்லா கட்சிகளைச் சார்ந்தவர்களுக்கும் அந்தக் குழுவில் இடம் தரப்பட்டது. அதைப் போலவே நியாய விலைக் கடைகளுக்கு அமைக்கப்படுகிற விஜிலென்ஸ் குழுவுக்கு தி.மு.க. நண்பர்கள் மட்டுமே இடம் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்குகிறார்கள். அது சீரான விநியோகத்தைத் தருமா என்பதையும் அரசு யோசிக்க வேண்டும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரத்தைத் தருகிறோம் என்று சொல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கிருந்த அதிகாரத்தையும் எடுத்துவிட்டார்கள். சமீப காலத்தில் கைத்தறி வார விழாவின்போது பெரிய போஸ்டர்கள் எல்லம்மா அச்சடித்து. . . .

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே தாங்கள் அனுமதி கொடுத்ததும் அவர் ஒரு குட்டிப் பிரசங்கத்தையே இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு பிரச்சினை என்றால் ஒரு கேள்வி வடிவத்தில் இரண்டொரு வாக்கியங்களில் கேட்பது தான் முறையானது, அதுமாத்திரமல்லாமல் இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் நேற்றைய தினமே என்னிடம் தங்கள் அறையில் பேசியிருக்கிறார். அது குறித்து சில தாள்களையும் என்னிடத்திலே கொடுத்திருக்கிறார். நான் உடனடியாக அதைக் குறித்து உள்ளாட்சித்துறை அமைச்சரிடம் பேசி சட்டமன்ற உறுப்பினர்

களையும் அந்தக் குழுவில் இணைக்க வேண்டுமென்று குறிப்பிட்டு, அதற்கான ஆணை தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆக நேற்றைய தினம் என்னிடம் பேசிவிட்டு அதற்கான நடவடிக்கை எடுத்த பிறகும்கூட இன்றைய தினம் வேண்டுமென்றே தி.மு.க. அரசைக் குற்றஞ்சாட்டுவதுபோல ஒரு நீண்ட உரையை இங்கே ஆற்றிக் கொண்டிருப்பது—இந்த அவையிலே தொடந்து 'ஜீரோ அவர்' என்கிற பெயரால் கடைப்பிடிக்கப்படுமானால் அது நல்லதல்ல என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் உட்காரலாம். என்னிடத்தில் இசைவு கேட்கிறபோது ஒரு செய்தியை எடுத்துச் சொல்லி, முதலமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெறுவதற்காக நீங்கள் இசைவு கேட்டீர்கள். முதலமைச்சருடைய ஒப்புதல் பெற்று நாங்களும் அதற்கு இசைவு அளித்தோம். எனவே, அவற்றைச் சுருக்கமாகச் சொல்லி அவர்களுக்கு விடை அளிப்பதற்கு வாய்ப்பு அளிப்பதுதான் முறையே தவிர, நீங்கள் அதிலே ஒரு முழுமையான விளக்கம் அளிப்பது முறையாகாது. இப்போது உங்கள் வினா முடிந்து விட்டது, அதற்கான விளக்கமும் முடிந்து விட்டது. அடுத்து திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

(ஆ) பெண் போலிசார், சீருடை பதவி உயர்வு குறித்து

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் முன்பு முதல்வராக இருந்த காலத்திலேதான் பெண் போலீசாரை நியமித்தார்கள். அவர்கள் நியமிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் கூட ஒரு சப் இன்ஸ்பெக்டருக்குக் கூட பதவி உயர்வு கிடைக்கவில்லை. ஆண் சப் இன்ஸ்பெக்டர்களுக்கு 10 ஆண்டுகளில் பதவி உயர்வு கிடைக்கிறது. இதற்கு உள்ள வித்தியாசம் என்ன? அதோடு பெண் போலீசார் உடுப்பு போடும்போது அவர்களுக்கு சற்றுச் சிரமமாக இருக்கின்றது. டாக்டர்கள்போடுவது போன்று ஒரு புஷ் கோட்டை பெண் போலீசார் மேலாகப் போட்டுக் கொள்ளலாம் என்ற ஒரு நிலைமை வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ? அடுத்து பெண் குற்றவாளிகளை பெண் போலீசாரே, பெண் சப்-இன்ஸ்பெக்டர்களே விசாரிக்கக்கூடிய ஒரு தன்மை